**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.396 நாள்: 17.08.2026

**சோழிங்கநல்லூர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அ·தாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அ·தாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.08.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தெற்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-192க்குட்பட்ட நீலாங்கரையில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளிக் கட்டடப் பணி, அப்பள்ளியின் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவு, அம்மா உணவகம், நீலாங்கரை கடற்கரையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணி மற்றும் இலவச ஒப்பனை அறை, கபாலீஸ்வரர் நகர் பகுதியில் உள்ள மின்மாற்றியினைச் சுற்றி அமைக்கப்பட்டு வரும் பாதுகாப்பு கட்டமைப்பு, வார்டு-197க்குட்பட்ட உத்தண்டி பகுதியில் உள்ள திறந்த வெளி நிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி, வார்டு-199க்குட்பட்ட டி.என்.எச்.பி. சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, தெற்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், அம்மா உணவகத்தில் வழங்கப்படும் உணவின் தரம், உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் சமையலறையினைத் தூய்மையாகப் பராமரித்திடவும், கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளி கட்டடத்தினையும், மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளையும், மேம்பாட்டுப் பணிகளையும் விரைந்து முடித்திடவும், கடற்கரைப் பகுதிகளில் அன்றாட தூய்மைப் பணிகள் மேற்கொள்ளவும், கடற்கரையில் உள்ள ஒப்பனை அறைகள் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**